பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:36 | 21.12.2023 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# போதைப் பொருள் கடத்தல்காரர்களின் 100கோடி ரூபா சொத்தை முடக்க நடவடிக்கை

கஹதுடுவ, மூனமலே வத்தை, தெஹிவளை கடற்பரப்பு, பாணந்துறை அலோபோமுல்ல ஆகிய இடங்களில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மூவருக்குச் சொந்தமான 100 கோடி ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான சொத்துகளைக் கைப்பற்றுவதற்கான விசாரணைகளை சட்டவிரோத சொத்துகள் விசாரணைப்பிரிவு ஆரம்பித்துள்ளது. தேசபந்து தென்னகோனின் பூரண மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கையுடன் இணைந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்தப் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தற்போது புஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குடு அசங்க என்ற பிரதான போதைப்பொருள் வியாபாரி சம்பாதித்த 100கோடி ரூபா பெறுமதியான சொத்துகளை சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

கஹதுடுவ, மூனமலே வத்த பிரதேசத்தில் அமைந்துள்ள குடு அசங்கடவுக்கு சொந்தமான பெரிய இரண்டு மாடிவீடு, 3 மாடி கட்டடம், 2 காணி, சொகுசு கார், 2 மோட்டார் சைக்கிள்கள், தங்க நகைகள் என்பன அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், பாணந்துறை அலோபோமுல்ல பகுதியில் முன்னணி போதைப்பொருள் வியாபாரி பிங்கி உள்ளிட்ட நால்வரை கைது செய்த பொலிஸார், பிங்கி என்ற போதைப்பொருள் வியாபாரிக்கு சொந்தமான சொத்துகளை அரசுக்கு சுவீகரித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சொத்துகளில் 4 நவீன வாகனங்கள், மூன்று மாடி வீடு, கட்டடம் மற்றும் பல சொத்துகள் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்போது துபாய் நாட்டில் தலைமறைவாகி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் பசிக் என்பவர் முதலீடு செய்த பல கோடி ரூபா பெறுமதியான தெஹிவளை கடற்கரையோரத்தில் அமைந்துள்ள சொகுசு சுற்றுலா ஹோட்டலை கையகப்படுத்துவதற்கு சட்டவிரோத சொத்து குவிப்பு பிரிவினர் நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தெஹிவளை கடற்பரப்பில் அமைந்துள்ள இந்த சொகுசு உணவக ஹோட்டலை முன்னாள் அரசியல்வாதி ஒருவரால் நடத்துவது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துபாயில் மறைந்துள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் முன்னாள் அரசியல்வாதி ஒருவருக்கு பணத்தை முதலீடு செய்து இந்த ஹோட்டலை நிர்மாணித்து மிகவும் வெற்றிகரமாக நடத்தி வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட மற்றும் கைப்பற்றப்படவுள்ள சொத்துகளின் பெறுமதி இதுவரை துல்லியமாக கணக்கிடப்படவில்லை எனவும், சொத்தின் தோராயமான பெறுமதி 100 கோடி ரூபாவை தாண்டும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் தீவிரமடையும் டெங்கு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த நான்கு வாரங்களாக அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்படுவதாக அதனைக் கட்டுப்படுத்த சகல நிறுவனத் தலைவர்களுக்கும் பொது மக்களுக்கும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத் துறை தம்மாலான முழு வீச்சில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இருப்பினும் பொதுமக்களின் பங்களிப்பு மிக அவசியமாக உள்ளது. கடந்த 3 நாட்களாக கொழும்பில் இருந்து வருகை தந்த பூச்சியியல் ஆய்வுக் குழுவினரால் பல நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் டெங்கு நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டுள்ளன. எனவே, சகல நிறுவனத் தலைவர்களுக்கும் 3 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உடனடியான துப்பரவுப் பணிகளை மேற்கொண்டு நுளம்பு பெருகக் கூடிய இடங்களை அகற்றுவதுடன் இத்துடன் கள நிலைமையை வாராந்தம் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். நுளம்பு குடம்பிகள் இனங்காணப்படும் நிறுவனங்களுக்கு எதிராகத் தொற்றுநோய் பரவ ஏதுவான சூழல் உள்ளதாகக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்க சுகாதார வைத்திய அதிகாரிகளையும் பொலிஸாரையும் கோரியுள்ளேன்.

இது தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் இலக்கமான 076 1799901 இற்கு தொடர்பு கொள்ளலாம் என்றார்.

# வடக்கு மாகாணத்தில் 19 ஆயிரம் பேர் பாதிப்பு



வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரை ஆறாயிரத்து 213 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 370 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர்கள் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் தொடர் மழை காரணமாக வடக்கின் 5 மாவட்டங்களும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 715 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 572 பேர் பாதிப்படைந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 372 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 904 பேர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதுடன் மன்னார் மாவட்டத்தில் 628 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 271 பேர் பாதிப்படைந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 279 குடும்பங்களைச் சேர்ந்த 878 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 219 குடும்பங்களைச் சேர்ந்த 745 பேரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

## ஒரு கிலோ பெரிய வெங்காயம் 700 ரூபா



புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் (நேற்று 20) ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 520 ரூபாயாக அதிகரித்துள்ளதால் வரும் நாட்களில், ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் சில்லரை விலை, 700 ரூபாயைத் தாண்டும் என, வியாபாரிகள் கூறுகின்றனர்.

இந்தியா வெங்காய இறக்குமதிக்கு தடை விதித்துள்ள நிலையில் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது.

மொத்த சந்தையில் உள்ளூர் வெங்காயம் வரத்து இல்லாததால், இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. இதேவேளை, நேற்று பல சில்லறை விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 600 முதல் 650 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

# ஊனமுற்ற வாக்காளர்களுக்கு விஷேட அடையாள அட்டை

தேர்தல் பணியின்போது, வாக்களிக்கும் போது மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காண தற்காலிக அடையாள அட்டை வழங்கும் பணியை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

அதன்படி, தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் நிகழ்வு இன்று (21) காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

டிசம்பர் 3 ஆம் திகதி சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றார்.

தேர்தல் ஆணையம், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அமைப்பு மற்றும் பாஃப்ரல் அமைப்பு ஆகியவை இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்துகின்றன.

# நாளை முதல் விசேட பஸ் ரயில் சேவை

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாளை (22) முதல் விசேட பஸ், ரயில் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ், பாடசாலை விடுமுறை நாட்களில் சொந்த ஊர்களுக்கு செல்லும் மக்களுக்காக விசேட பஸ், ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

நாளை முதல் நீண்ட தூர சேவைகளுக்காக 100 மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது

# இலங்கையின் பணவீக்கம் அதிகரிப்பு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில், நவம்பர் மாதத்தில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 2.8 சதவீதமாக பதிவாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில், ஒக்ரோபர் மாதத்தில் பணவீக்கம் 1 சதவீதமாக இருந்தது. ஒக்ரோபர் மாதத்தில் -5.2 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம், நவம்பரில் -2.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் 2023 ஒக்ரோபரில் உணவு அல்லாத பணவீக்கம் 6.3 சதவீதமாக இருந்தது, நவம்பரில் 7.1 சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

## வரிகட்டி புத்தகங்கள் படிக்க வேண்டிய நிலை?

**இறக்குமதி செய்யப்படும் புத்தகங்களுக்கு 18% வட் வரியை இலங்கை அறிவித்துள்ளது. இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஐரோப்பிய மற்றும் சர்வதேச புத்தக விற்பனையாளர்கள் சம்மேளனம், சர்வதேச வெளியீட்டாளர்கள் சங்கம் ஆகியவை வேண்டுகோள் விடுத்துள்ளன.**

**இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் நிதிக் கடமைகளுக்கு இணங்க புதிய வட் வரிகளை அறிமுகப்படுத்துவதற்கும் புத்தகங்களுக்கான விலக்குகளை நீக்குவதற்கும் இலங்கை அரசாங்கம் அண்மையில் ஏற்றுக்கொண்ட பிரேரணை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.**

**இலங்கையானது யுனெஸ்கோ புளோரன்ஸ் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளதுடன், கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசாரப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பான உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளது. வட் விலக்குகள் பட்டியலில் இருந்து புத்தகங்களை நீக்குவது, புளோரன்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் நாட்டின் உறுதிப்பாட்டிற்கு முற்றிலும் முரணாக உள்ளது. சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரண்டிற்கும் எழுதியுள்ள கடிதங்களில், சர்வதேச நிறுவனங்கள், புளோரன்ஸ் உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் உறுதிமொழிகளுக்கு முரணானதாக இருக்கும் என்றும், வரி அதிகரிப்பை மறுபரிசீலனை செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும் சர்வதேச அமைப்புகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.**

**"நிதி சிக்கல்களின் போது சில நிதிக் கொள்கைகள் அவசியம் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம், புத்தகங்கள் உட்பட கலாசார தயாரிப்புகள் அத்தகைய நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்பவில்லை. அனைத்து நாடுகளிலும் கல்வி, கல்வியறிவு மற்றும் கலாசார மேம்பாட்டுக் கொள்கைகளின் வெற்றியை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும் காரணத்தால், எந்த வடிவத்திலும் புத்தகங்கள் மீது கட்டணங்கள் விதிக்கப்படக்கூடாது. பெரியவர்கள் அல்லது குழந்தைகளுக்கான புத்தகங்கள், வாசிப்புத் திறன், ஆர்வம், புரிந்துகொள்ளுதல் மற்றும் தனிப்பட்ட தொழில் ஆகியவற்றின் அடிப்படையை வழங்குகின்றன, இவை அனைத்தும் ஒரு நாட்டின் நீடித்த சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன என சர்வதேச வெளியீட்டாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.**

**வாசிப்பு என்பது மனிதனின் சுவாசமாகும். சிறுவர்களை நல்வழிப்படுத்துவதில் வாசிப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இறக்குமதி செய்யப்படும் புத்தகங்களின் விலை அதிகரிப்பதால் வாசிப்பின் வேகம் குறைவடைய வாய்ப்புள்ளது.**

**ஒரு மனிதனை முழுமையாக்கும் கருவியாகவே வாசிப்பு காணப்படுகின்றது. எனவே, நாம் ஒவ்வொருவரும் சிறுவயதிலிருந்தே வீணான பொழுதுபோக்குகளில் நேரத்தை கழிப்பதற்கு பதிலாக நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துவதோடு, சிறந்த அறிவுத்திறனையும் நுண்ணறிவினையும் வழங்குகிறது.**

**பரந்துபட்ட உலக அறிவினைப் பெற்றுக் கொள்ளவும், புதிய புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் இந்த வாசிப்பு எமக்கு உதவுவதாகவே காணப்படுகின்றது. எனவே மனித வாழ்வில் வாசிப்பு இன்றியமையாததாகும்.**

**"நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" என்ற ஔவையாரின் வரிகள் இந்த உலகில் ஒரு மனிதன் எந்த அளவுக்கு நூல்களை வாசிக்கிறானோ, அந்த அளவுக்கு அவன் அறிவினை பெற்றுக்கொள்கிறான் என கூறுகின்றது.**

**மேலும் வாசிப்பதன் மூலம் வெறும் புத்தக அறிவினை மாத்திரம் பெற்றுக் கொள்ளாமல், எம்மை சூழ உள்ள சமூகம் பற்றியும், உலகத்தின் நிலை பற்றியும் பொது அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துகின்றது என்ற வாசகம் இதனாலேயே சொல்லப்படுகின்றது. வாசிப்பு என்பது மனிதனுக்கு சிறந்த ஒரு பொழுதுபோக்கையும் மன அழுத்தத்துக்கான அமைதி தன்மையையும் வழங்குகின்றது.**

**பல்வேறு புதிய விடயங்களையும், வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களையும் கற்றுக் கொள்வதற்கு வாசிப்பு உதவுவதோடு, பல்வேறு தலைவர்களின் உருவாக்கத்திற்கு காரணியாகவும் இந்த வாசிப்பு அமைந்துள்ளது. மேலும் கற்பனை ஆற்றல், பொறுமை, படைப்பாற்றல் போன்ற பல்வேறு நன்மைகளை தருவதாகவும் வாசிப்பு காணப்படுகின்றது.**

## அமைச்சர் பொன்முடிக்கு 3 ஆண்டுகள் சிறை



*தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மனைவி மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் 3 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.*

*2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சி ஆகியோர் வருமானத்திற்கு அதிகமாக ஒரு கோடியே 72 லட்சம் ரூபாய் சொத்து சேர்த்திருப்பது நிரூபணமாகியுள்ளதாகவும் அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்பது குறித்து கருத்து கேட்பதற்காக, இருவரும் இன்று காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என நீதிபதி ஜெயச்சந்திரன் உத்தரவிட்டார். அதன்படி இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.*

*தண்டனை 30 நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், பொன்முடியும் அவரது மனைவியும் உடனே சிறை செல்லமாட்டார்கள்.*

*தண்டனையை குறைக்க வேண்டும் என மனைவி விசாலாட்சி கோரிக்கை விடுக்க, அதற்கு உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டும் என உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயச்சந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.*

## முகக்கவசத்தை கட்டாயமாக்கிய சிங்கப்பூர் அரசு

*உலகெங்கும் கொரோனா நோய் தொற்று மீண்டும் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக சிங்கப்பூர் அரசாங்கம் முகக்கவசத்தை கட்டாயமாக்க முடிவு செய்துள்ளது.*

*இந்த மாதத்தில் மட்டும் சிங்கப்பூரில் கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை 56000 ஆகும். சிங்கப்பூர் சுகாதார அமைச்சகத்தின் அறிக்கை படி, டிசம்பர் 3 முதல் 9 ஆம் திகதி வரை, சுமார் 56043 கொரோனா வழக்குகள் பதிவாகியுள்ளது.*

*இது அதற்கு முந்தைய வாரத்தைவிட அதிகமாகும்.*

*இதனால், முகக்கவசத்தை கட்டாயமாக்குவதோடு மட்டுமின்றி, பயண ஆலோசனைகளை புதுப்பிக்கவும் ஆலோசித்து வருவதாக கூறப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களை, தனிப்பட்ட, சமூக பொறுப்பினை கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது சிங்கப்பூர் அரசு.*

## 48 வருட சிறைவாசத்தின் பின் விடுதலை

*அமெரிக்காவின் தென் மத்திய மாநிலம் ஒக்லஹாமா (ஒக்லகம).1975 காலகட்டத்தில் இம்மாநில தலைநகரமான ஒக்லஹாமா சிட்டியின் புறநகர் பகுதியில் உள்ள ஒரு மதுக்கடையில் நடந்த கொள்ளை முயற்சியில் கேரலின் சூரா ஜர்ஸ் என்பவர் கொலை செய்யப்பட்டார்.*

*இந்த வழக்கில் க்ளின் சிம்மன்ஸ் எனும் இளைஞர், டான் ராபர்ட்ஸ் என்பவர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*சிம்மன்ஸ், குற்றம் நடந்ததாக கூறப்பட்ட காலகட்டத்தில், தான் லூசியானா மாநிலத்தில் இருந்ததாகவும், இந்த கொலைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லையென்றும் கூறி வந்தார்.*

*ஆனால், நீதிமன்றம் அவருக்கும், அவருடன் கைது செய்யப்பட்ட டான் ராபர்ட்ஸிற்கும், மரண தண்டனை வழங்கியது. சில ஆண்டுகளில் மரண தண்டனை சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டது. அப்போது சிம்மன்ஸிற்கு வயது 22 என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், கடந்த ஜூலையில் இவ்வழக்கு மறுவிசாரணைக்கு வந்தது.*

*தற்போது இந்த வழக்கில் ஒக்லஹாமா மாவட்ட நீதிமன்றம், சிம்மன்ஸ் குற்றமற்றவர் என கூறி தண்டனையை ரத்து செய்தது. இதைத் தொடர்ந்து சிம்மன்ஸ் விடுதலை செய்யப்பட்டார்.*

*ஒக்லஹாமா மாநில குற்றவியல் சட்டத்தின்படி தவறாக குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனை பெற்றவர்கள் சுமார் $1,75,000 வரை இழப்பீட்டு தொகை பெற முடியும்.*

# மருந்துக் கடைகள் சுற்றிவளைப்பு – ஐவர் கைது

கம்பஹா பொது சுகாதார பரிசோதகர்கள், சீதுவ சுகாதார வைத்திய அதிகாரிகளின் சீதுவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேற்று (20) மருந்துக் கடைக்களை ஐவரை சீதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது பாடசாலைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள மருந்துக் கடைகளில் மருந்து சீட்டு இல்லாமல், மருந்தாளுநர்கள் இன்றி மருந்துகளை விநியோகித்த குற்றத்திற்காக 1600 மருந்துகளுடன் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 26 கோடி ரூபாவிற்கும் மேல் வசூலிக்கப்பட்ட அபராதம்

இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் மூலம் 26 கோடி ரூபாவிற்கும் அதிகமான அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதல் தற்போது வரை சந்தையில் சுமார் 22,000 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், சுமார் 21,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த வழக்குகள் மூலம் நீதிமன்றங்கள் ஊடாக இருபத்தி ஆறு கோடியே எழுபத்தாறு லட்சத்து முப்பதாயிரத்து நானூற்று நாற்பத்து எட்டு ரூபாயை அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், இருப்புக்களை மறைத்து வைத்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலைகளை காட்சிப்படுத்தாமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக உரிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# மலையக ரயில் சேவையில் தாமதம்



மெனிகே புகையிரதம் ஹட்டன் சிங்கமலை பிங்கேக்கு அருகில் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டறை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக மலையக ரயில் பயணம் தடைப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

நானு ஓயாவிலிருந்து கண்டி ஊடாக கொழும்பு கோட்டை வரை பயணிக்கும் 1024 இலக்க திகிரி

# அமைச்சர் கெஹலியவிடம் விசாரணை?

தரமற்ற நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் தேவைப்பட்டால் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் வாக்கு மூலம் பதிவு செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இதுவரை இடம்பெற்று வரும் விசாரணைகளில் எந்தவொரு தரப்பினரும் தலையிடவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்த



ரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மோசடி தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை கைது செய்ய வேண்டும் என அகில இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

# மாலைதீவுக்குச் சென்ற விமானம் தரையிறக்கம்




கட்டுநாயக்கவில் இருந்து மாலைதீவு நோக்கி சென்ற ஸ்ரீலங்கன் விமானம் புறப்பட்ட 10 நிமிடங்களில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

ஏர்பஸ் ஏ-30 ரக விமானத்தில் 201 பயணிகள் இருந்தனர். அந்த விமானத்தில் இருந்த பயணிகளை மற்ற விமானங்களில் மாலைதீவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# வவுனியாவில் 64 குளங்கள் உடைப்பு

நாடெங்கும் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ்

ளும் வான் பாய்கின்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பாலிக்குளம், சின்னசிப்பிகுளம், தேகக்கம்



குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையினால் 479 குளங்கள் வான் பாய்வதுடன் இதுவரை 64 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக அனர்த்த

உள்ள 620 குளங்களில் 456 குளங்களும், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் 17 குளங்களும், மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் 06 குளங்க

குளம், பிரமநாலகுளம், பரயநாலங்குளம் உட்பட 64 குளங்கள் உடைப்பெடுத்ததாக கமநல அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

# புதிய இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கை வந்தடைந்தார்



இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தை பொறுப்பேற்பதற்காக இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா புதன்கிழமை இலங்கை வந்தடைந்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக தூதுவர் சந்தோஷ் ஜா இன்று (டிசம்பர் 21) கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நற் சான்றிதழ்களை கையளித்ததன் பின்னர் சந்தோஷ் ஜா தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

# பேஸ்போல் பிரீமியர்லீக்கில் 12 நாடுகள் போட்டி

ஜப்பானில் 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள பேஸ்போல் பிரீமியர் லீக்கில் விளையாடுவதற்கு உலக தரவரிசையில் முதலிடத்தில் உள்ள 12 நாடுகள் தகுதிபெற்றுள்ளன.

ஜப்பான் தலா, நகரில் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடக்கும் போட்டியில் ஐந்து ஒலிம்பிக் கண்டங்களில் இருந்து ஜப்பான், மெக்சிக்கோ, அமெரிக்கா, தென் கொரியா, சீனதைபே, வெனிசுலா, நெதர்லாந்து, கியூபா, டொமினிகன் குடியரசு, புவேர்ட்டோரிக்கோ, அவுஸ்திரேலியா, பனாமா ஆகிய 12 நாடுகள் தகுதி பெற்றுள்ளன.

ரவுண்ட் ராபின் போட்டிகளில் பங்கேற்கும் அணிகள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்படும். ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரண்டு இடங்கள் சூப்பர் சுற்றுக்கு முன்னேறும். சூப்பர் ரவுண்டில், முதல் மற்றும் இரண்டாவது இடங்களைப் பிடிக்கும் அணிகள் பிரீமியர் 12 இறுதிப் போட்டியில் போட்டியிடும், அதேநேரத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பிடிக்கும் அணிகள் மூன்றாவது இடத்திற்காக மோத வேண்டும். மதிப்பு மிக்க போட்டி மூன்று இடங்களில் நடைபெறும். சீனதைபே மற்றும் அமெரிக்காஸ்



(உறுதிப்படுத்தப்பட வேண்டிய இடம்) குழு நிலைகளை நடத்தும், ஜப்பானிய தலைநகர் நவம்பர் 21-03வரை சூப்பர் ரவுண்டை நடத்தும். நவம்பர் 10-04வரை குரூப் ஆ ஐ அமெரிக்கா நடத்தும். நடத்தும் நாடு, நகரம் மற்றும் இடம் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். குரூப் பி தைபேயில் நவம்பர் 14-08 வரை விளையாடப்படும், தொடக்க ஆட்டம் நவம்பர் 13 அன்று ஜப்பானில் உள்ள நகோயா டோமில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜப்பானில் உள்ள டோக்கியோ டோம் நவம்பர் 21-03 வரை ரவுண்ட்- ராபின் வடிவத்தில் சூப்பர் ரவுண்டை நடத்தும், அதைத் தொடர்ந்து நவம்பர் 24 அன்று பதக்கப் போட்டிகள் நடைபெறும்.

உலகின் நம்பர் வன் தரவரிசையில் உள்ள ஜப்பான், நடப்பு பிரீமியர் 12 சாம்பியன்களாக உள்ளது, மேலும் உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரரான ஜப்பானின் ஷோஹேய் ஒஹ்தானி வீட்டில் விளையாடுவதன் மூலம் அதன் உலகளாவிய ஆதிக்கத்தை நீடிக்கும் வாய்ப்பைப் பெறும்.

## டோனி கொடுத்த வாக்குறுதி
## நெகிழ்ச்சியில் ராபின் மின்ஸ் தந்தை

ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 21 வயதாகும் ராபின் மின்ஸை வாங்க சி.எஸ்.கே, மும்பை, குஜராத் உள்ளிட்ட 3 சாம்பியன் அணிகளும் போட்டியிட்டது. இறுதியாக குஜராத் அணி ராபின் மின்ஸை ரூ.3.6 கோடிக்கு ஏலத்தில் வாங்கியது.

முன்னாள் இரா ணுவ வீரரின் மகனான ராபின் மின்ஸ், ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்து



ஐ.பி.எல் தொடரில் முதல் விளையாடும் முதல் பழங்குடியின கிரிக்கெட் வீரராவார். ராபின் மின்ஸ் ஏலத்தில் எடுக்கப்பட்ட போது அவரின் தந்தை பிரான்சிஸ் சேவியர் ஜார்க்கண்ட் விமான நிலையத்தில் காவலாளியாகப் பணியாற்றி வந்துள்ளார். அப்போது விமான நிலையத்தில் பணியாற்றி வந்த ஊழியர் கூறிய பின்னரே, தன் மகன் ஐ.பி.எல் ஏலத்தில் வாங்கப்பட்டுள்ள சம்பவம் தெரிய வந்துள்ளது. இதனால் அவரின் குடும்பமே மகிழ்ச்சியடைந்துள்ளது. இவரை ஜார்க்கண்ட் மாநிலத்தின் கிறிஸ் கெய்ல் என்று அம்மாநில கிரிக்கெட் வட்டாரத்தில் அழைக்கப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன் பிரான்சிஸ் சேவியர் டோனியை சந்தித்தது குறித்துபேசி இருக்கிறார். அதில், சில மாதங்களுக்கு முன் டோனியை ஜார்க்கண்ட் விமான நிலையத்தில் சந்தித்தேன். ஐ.பி.எல் ஏலத்தில் எந்த அணியும் ராபினை வாங்க முன்வரவில்லை என்றால், நிச்சயம் சி.எஸ்.கே அணி ஏலத்தில் எடுக்கும் என்று தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

டோனி அறிவுறுத்தியதன் பேரில் ராபின் மின்ஸ் பெயர் உச்சரிக்கப்பட்ட போது முதல் ஆளாக சி.எஸ்.கே அணி கைகளை உயர்த்தியது. ஜார்கண்ட் மாநிலத்திற்காக இதுவரை ரஞ்சிடிராபி போட்டியில் விளையாடியது இல்லை. அதே நேரம், ஜார்கண்ட்டின் U-19 மற்றும் U- 25 அணியின் கப்டனாக செயல்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள 17 ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடருக்கு முன்னதாக செவ்வாய்க்கிழமை (19.12.2023) துபாயில் வீரர்களின் மினி ஏலம் நடைபெற்றது. ஐ.பி.எல் 2024 ஆம் ஆண்டுக்கான மினி ஏலத்தில், தமிழக வீரர்கள், ஷாருக்கான், மணிமாறன் சித்தார்த் கோடிகளைக் குவித்து தேர்வாகியுள்ளனர்.

## அதிக விலையில் விற்கப்பட்ட தமிழக வீரர்கள்



ஏலம் எடுப்பதற்கு காலியாக இருந்த மொத்தம் 77 இடங்களுக்கு 333 வீரர்கள் ஏலத்தில் தங்களின் பெயர்களைக் கொடுத்தனர். அதில், 214 இந்திய வீரர்கள், 119 வெளிநாட்டு வீரர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தது.

இந்த ஐ.பி.எல் மினி ஏலத்தில், தமிழக வீரர்கள், ஷாருக்கான், மணிமாறன் சித்தார்த் ஆகிய 2 வீரர்கள் மட்டும் கோடிகளைக் குவித்து ஏலத்தில் தேர்வாகியுள்ளனர். தமிழக வீரர் ஷாருக்கான் - ரூ.7.4 கோடி, குஜராத் டைட்டன்ஸ் அணிக்காக ஏலம் எடுக்கப்பட்டுள்ளார். அடுத்து, மணிமாறன் சித்தார்த் - ரூ. 2.4 கோடி - லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்காக ஏலம் எடுக்கப்பட்டுள்ளார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 21.12.2023 அன்று வெளியிடப்பட்டது.